‘கோயில் நிதியில் கல்லூரியைத் திறப்பதா’ என்ற

எடப்பாடி பழனிச்சாமியை கண்டித்து - கோவையில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

தி.மு.க. மாணவரணி சார்பில் – இரா.இராஜீவ் காந்தி தலைமையில் ஆயிரக்கணக்கானோர் திரண்டு கண்டன முழக்கமிட்டனர்!

கோவை, ஜூலை 15- முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் உத்தரவின்படி; ஏழை, எளிய, சாமானிய மாணவர்களுக்கு உயர்கல்வி பெற முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் கல்லூரிகளைத் திறந்து வைத்ததை “கல்லூரிகளைத் திறப்பது சதிச்செயல்” என பதவி சுகத்துக்காக பேரறிஞர் அண்ணாவை அடகு வைத்த எடப்பாடி பழனிசாமி இப்போது, “உங்களுக்கெல்லாம் எதற்கு கல்வி?” என்ற சங்கிகளின் குரலாய் ஒலிக்கத் தொடங்கியிருக்கிறார்.

கோவில்களுக்கு மக்கள் காணிக்கையாகக் கொடுக்கும் உபரி நிதியிலிருந்து கல்வி நிலையங்கள், சிறார், முதியோர் பராமரிப்பு நிலையங்கள், மருத்துவமனைகள் அமைக்கலாம் என்பது இந்து சமய அறநிலையத்துறையின் சட்டங்களில் ஒன்று. ஆனால் அதுகூடத் தெரியாமல் திராவிட இயக்கத்தின் துரோகியாக, கல்விக்காக திராவிட மாடல் அரசு எடுக்கும் முன்னெடுப்புகளைக் கொச்சைப் படுத்தும் விதமாக கோவையில் பேசியுள்ளார் எடப்பாடி பழனிசாமி.

அவரின் இந்தப் பேச்சைக் கண்டித்து தி.மு.க. மாணவர் அணி சார்பில் நேற்று (ஜூலை 14ஆம் தேதி) பிற்பகல் 2.30 மணி அளவில், “கோவை, டாடாபாத், சிவானந்தா காலனி”யில், தி.மு.க. மாணவர் அணி செயலாளர் இரா.ராஜீவ்காந்தி தலைமையில் மாணவர் அணி மாநில துணைச் செயலாளர்கள் மன்னை த.சோழராஜன், சேலம் இரா.தமிழரசன், அதலை பி.செந்தில்குமார், தமிழ் கா. அமுதரசன், பி.எம்.ஆனந்த், வி.ஜி. கோகுல், பூர்ண சங்கீதா சின்னமுத்து, திருமதி ஜெ.வீரமணி, ஜெ.இராமகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையில் ”மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்” நடைபெற்றது.

இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில், கழக மாணவர் அணியின் மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட நிர்வாகிகள் மற்றும் கல்லூரி மாணவர் அமைப்பின் நிர்வாகிகள் எனத் தமிழ் நாடு முழுவதுமி ருந்து 20,000 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் கோவை மாநகர் மாவட்ட அமைப்பாளர் சிவப்பிரகாஷ் வரவேற்புரை ஆற்றினார். ஆர்ப்பாட்டத்தின் நோக்கவுரையைகோவை வடக்கு மாவட்ட அமைப்பாளர் பிரபுவும், நன்றியுரையைக் தெற்கு மாவட்ட அமைப்பாளர் அந்தோணி ராஜ்உம் நிகழ்த்தினார்.

கண்டன ஆர்ப்பாட்டத்தில் தமிழ்நாட்டின் கல்விக்கான நிதியை ஒதுக்காதது, நீட் தேர்வு மூலம் ஏழை, எளிய மாணவர்களின் கனவுகளைச் சிதைத்தது, துணை வேந்தர்கள் நியமிக்கவிடாமல் செய்தது, பேராசிரியர்கள் நியமனங்களில் முட்டுக் கட்டை, சிறுபான்மையின, தலித், பழங்குடியின மாணவர்களின் உயர்கல்விக்கான கல்வி உதவித் தொகையை நிறுத்தியது உள்ளிட்டவற்றை மையப்படுத்தி ஒன்றிய அரசுக்கு எதிராகவும் எடப்பாடி பழனிச்சாமியின் துரோகத்தை வெளிச்சம் போட்டுக் காட்டும் வகையில் முழக்கங்கள் எழுப்பப்பட்டன. இந்த முழக்கங்கை மாணவர் அணிச் செயலாளர் இரா. ராஜீவ்காந்தி எழுப்ப கூடியிருந்த மாணவர்கள், இளைஞர்களும் ஒருசேர எழுப்பினார்கள்.

மேலும் இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், கோவை நாடாளுமன்ற உறுப்பினர் கணபதி ராஜ்குமார், கோவை மாநகர் மாவட்டச் செயலாளர் ந.கார்த்திக், கோவை வடக்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் ரவி, தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் எடப்பாடி பழனிசாமியைக் கண்டித்தும் மோடி அரசுக்கு எதிராகவும் கண்டன உரை ஆற்றினர்.

சென்னை வடக்கு மாவட்டம்

இராயபுரம் கிழக்கு, ஆர்.கே.நகர். மேற்கு, பெரம்பூர் தெற்கு ஆகிய பகுதிகளில் உள்ள மாவட்ட பிரதிநிதி பொறுப்புகளுக்கான தேர்தல் வேட்புமனு தாக்கல்

தலைமைக் கழக அறிவிப்பு

சென்னை வடக்கு மாவட்டம், இராயபுரம் கிழக்கு பகுதியில் மாவட்ட பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட கலைச்செல்வன் 49வது வட்டப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டதாலும் ஆர்.கே.நகர் மேற்கு பகுதியில் , மாவட்ட பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட வேதாச்சலம் மறைவெய்தியதாலும், இரவிக்குமார் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளராக நியமிக்கப்பட்டதாலும் பெரம்பூர் தெற்கு பகுதியில் மாவட்ட பிரதிநிதி யாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஏ.என்.திருமலை மறைவெய்தியதாலும், சென்னை வடக்கு மாவட்டத்தில் நான்கு மாவட்ட பிரதிநிதிகள் பொறுப்பு நிரப்பட வேண்டியிருப்பதால்,

சென்னை வடக்கு மாவட்டம், இராயபுரம் கிழக்கு பகுதியில் ஒன்று ஆர்.கே.நகர் மேற்கு பகுதி இரண்டு பெரம்பூர் தெற்கு பகுதியில் ஒன்று என மொத்தம் நான்கு மாவட்ட பிரதிநிதி பொறுப்புகளுக்கு தேர்தல் நடைபெற உள்ளதை யொட்டி, இப்பொறுப்புகளுக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து அதற்குரிய கட்டணத்துடன் தலைமைக் கழகத்தில் 2025 ஜூலை 16 (புதன் கிழமை) அன்று காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணிக்குள்ளாக செலுத்தி இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.

வேட்புமனுக் கட்டண விவரம்
மாவட்ட பிரதிநிதிகள்
பொறுப்பு ஒன்றுக்கு வேட்புமனுக் கட்டணம் .... ரூ.1000/
தகுதி விவரம்

வேட்புமனுவினை முன்மொழிபவர் / வழிமொழிபவர் வட்டக் கழகத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட செயலாளர் அல்லது பிரதிநிதியாக இருத்தல் வேண்டும்.

வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.25/ கட்டணம் செலுத்தி தலைமைக் கழகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

``அண்ணா அறிவாலயம்''
சென்னை 600 018,
நாள் : 14-7- 2025.

துரைமுருகன்,
பொதுச் செயலாளர்
தி.மு.க.

"ஓரணியில் தமிழ்நாடு" சென்னை தென்மேற்கு மாவட்டம்

தியாகராயர் நகர் - மயிலாப்பூர் சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட BLA2, BDA நிர்வாகிகளுடன் காணொலி வாயிலாக - அமைச்சர் மா.சுப்பிரமணியன் - மயிலை த.வேலு எம்.எல்.ஏ. கலந்துரையாடல்!

சென்னை தென்மேற்கு மாவட்டத்தில் ‘ஓரணியில் தமிழ்நாடு’ பணிகள் குறித்து காணொலி காட்சி வாயிலாக இன்று (15.07.2025 செவ்வாய்க்கிழமை) மாலை 6 மணி அளவில், சென்னை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன் மற்றும் சென்னை தென்மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. ஆகியோர் தென்மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட தியாகராயர் நகர் மயிலாப்பூர் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளுக்கு உட்பட்ட BLA2 மற்றும் BDAக்கள் 1000 பேருடன் கலந்துரையாடுகிறார்கள்.

ஆகவே இந்த காணொளி காட்சி வாயிலாக நடைபெறும் கலந்துரையாடல் கூட்டத்தில் அந்தந்த தொகுதிகளுக்குட்பட்ட பகுதிக் கழகச் செயலாளர்கள், தொகுதிப் பார்வையாளர்கள் மற்றும் வட்டக் கழகச் செயலாளர்கள் குறித்த நேரத்தில் பங்கேற்றிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

- சென்னை தென்மேற்கு மாவட்ட தி.மு.க.

அரைவேக்காடு எதிர்க்கட்சித் தலைவருக்கும் - ‘ படிக்காதே’ எனத் தடுக்கும் காவிக் கூட்டத்துக்கும் - கோவையில்

தமிழ்நாட்டு மாணவர்களின் உணர்வை பதிலாகச் சொல்லி இருக்கிறது தி.மு.க. மாணவரணி!

முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, ஜூலை 15-

கோயில்களில் நிதியைக் கொண்டு கல்லூரி திறப்பதா என்ற எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமியைக் கண்டித்து கோவையில் தி.மு.க. மாணவரணி சார்பில் பல்லாயிரவர் பங்கேற்ற ஆர்ப்பாட்டம் நேற்று நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டம் குறித்து “காவியா - கல்வியா?” என்ற தலைப்பில் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

“காவியா கல்வியா?

படி படி என்கிற திராவிடத்தில் கிளைவிட்டுவிட்டு, படிக்காதே எனத் தடுக்கும் காவிக்கூட்டத்துக்குக் கால் அமுக்கும் துரோகிகளின் பேச்சுக்கு, தமிழ்நாட்டு மாணவர்களின் உணர்வைக் கோவையில் பதிலாகச் சொல்லியிருக்கிறது தி.மு.க. மாணவர் அணி.

அரைவேக்காட்டு எதிர்க்கட்சித் தலைவருக்கு அறநிலையத்துறை சட்டமும் தெரியவில்லை, கடந்த கால அ.தி.மு.க. ஆட்சிகளிலும் கோயில் நிர்வாகங்கள் கல்வி நிறுவனங்களை நடத்தியதும் தெரியவில்லை.

ஆனால், தமிழ்நாட்டு மாணவர்கள் கல்வி பெறுவதற்கு எதிராகவோ, அதனைக் கொச்சைப்படுத்தியோ பேசினால் ஓரணியில்_தமிழ்நாடு உங்களை ஓட ஓட விரட்டும், எங்கள் Dravidian Stock **கூட்டம்”**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

தி.மு.க. கலை, இலக்கியப் பகுத்தறிவு பேரவை துணைச் செயலாளர் நியமனம்!

தலைமைக் கழக அறிவிப்பு!

தி.மு.க. கலை, இலக்கியப் பகுத்தறிவு பேரவை துணைச் செயலாளராக **என்.எஸ்.மாதேஷ்வரன்**, (ஓசூர், கிருஷ்ணகிரி மாவட்டம்) அவர்கள் **தி.மு.க. கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை துணைச் செயலாளராக** தலைமைக் கழகத்தால் நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாநில கலை, இலக்கியப் பகுத்தறிவு பேரவை நிர்வாகிகளுடன் இணைந்து இவர் கழகப் பணியாற்றுவார்.

“அண்ணா அறிவாலயம்”
சென்னை - 600 018.
நாள்: 14.7.2025

துரைமுருகன்
பொதுச் செயலாளர்
தி.மு.க.

சென்னை வடக்கு மாவட்டம்

பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் வேட்பு மனுத் தாக்கல்

தலைமைக் கழக அறிவிப்பு

"திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில் சென்னை வடக்கு மாவட்டத்தில், பொதுக்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட எல்.அருளரசன் அவர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதால்;

சென்னை வடக்கு மாவட்டம், பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2025, ஜூலை 16 (புதன்கிழமை) அன்று ரூ.25000/வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.

வேட்புமனுவினை முன்மொழிபவரும், வழிமொழிபவரும் சென்னை வடக்கு மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிச் செயலாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட பிரதிநிதிகளாகத்தான் இருக்க வேண்டும்.

தலைமைக் கழகத்தில், வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.1000/ வீதம் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

``அண்ணா அறிவாலயம்''
சென்னை 600 018,
நாள் : 14-7- 2025.

துரைமுருகன்,
பொதுச் செயலாளர்
தி.மு.க.

புதுக்கோட்டை வடக்கு மாவட்டம்

புதுக்கோட்டை வடக்கு, புதுக்கோட்டை தெற்கு ஆகிய மாநகரங்களில் அடங்கியுள்ள வார்டுகள் விவரம்!

தலைமைக் கழகம் அறிவிப்பு!

கழக நிர்வாக வசதிக்காகவும் - கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் புதுக்கோட்டை வடக்கு மாவட்டம், புதுக்கோட்டை மாநகரம், புதுக்கோட்டை வடக்கு, புதுக்கோட்டை தெற்கு ஆகிய இரண்டு மாநகரக் கழகங்களாகப் பிரிக்கப்படுகிறது. அவ்வாறு பிரிக்கப்பட்ட மாநகரக் கழகங்கள் பின்வரும் வார்டுகள் கொண்டதாக அமையும்.

புதுக்கோட்டை வடக்கு மாநகரம் : 2, 3, 8, 9, 11, 12, 14, 16, 17, 25, 26, 27, 28, 29, 30, 32, 33, 35, 36, 40, 42 ஆகிய 21 வார்டுகள்.

புதுக்கோட்டை தெற்கு மாநகரம் : 1, 4, 5, 6, 7, 10, 13, 15, 18, 19, 20, 21, 22, 23, 24, 31, 34, 37, 38, 39, 41 ஆகிய 21 வார்டுகள்.

மாநகரக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்

மேற்கண்டவாறு பிரிக்கப்பட்ட **புதுக்கோட்டை வடக்கு, புதுக்கோட்டை தெற்கு** ஆகிய மாநகரங்களில் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, மாநகரக் கழகப் பொறுப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

புதுக்கோட்டை வடக்கு மாநகரம்
பொறுப்பாளர் : **எம். லியாகத் அலி**
புதுக்கோட்டை

புதுக்கோட்டை தெற்கு மாநகரம்
பொறுப்பாளர் : **வே. ராஜேஷ்**
புதுக்கோட்டை

அண்ணா அறிவாலயம்
சென்னை - 18
நாள் : 14.7.2025

துரைமுருகன்
பொதுச் செயலாளர்
தி.மு.க.